**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# ஏழைகளுக்கு சிறந்த மருத்துவ சிகிச்சை வழங்க தொழில்நுட்பம் பெரிதும் உதவும்

## ஐஐடி இயக்குநர்

**சென்னை, ஆக. 19:** ஏழைகளுக்கு சிறந்த மருத்துவ சிகிச்சை அளிக்க தொழில்நுட்பங்கள் பெரிதும் உதவும் என சென்னை ஐஐடி இயக்குநர் வீ.காமகோடி தெரிவித்தார்.

முடநீக்கியல் மற்றும் விபத்து காய சிகிச்சைக்கான சர்வதேச சங்கத்தின் சார்பில் இளம் அறுவை சிகிச்சை மருத்துவர்களுக்கான இரண்டு நாள் மாநாடு சென்னை போரூர் ஸ்ரீ ராமச்சந்திரா உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் சனிக்கிழமை தொடங்கியது.

இந்த மாநாட்டை ஐஐடி இயக்குநர் காமகோடி தொடங்கி வைத்து பேசியது: மேம்படுத்தப்பட்ட மெய்நிகர் மற்றும் ரோபோ தொழில்நுட்பம் மூலம் துல்லியமான மற்று மிகச்சிறந்த அறுவை சிகிச்சையை மேற்கொண்டு நோயாளிகளை விரைவாக குணமடையச் செய்ய முடியும்.

இதற்காக சென்னை ஐஐடி மருத்துவக் கல்லூரிகளுடனும் பிற அமைப்புகளுடனும் இணைந்து ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது.

மிக துல்லியமான ஊடுருவல் மற்றும் அறுவை சிகிச்சைகளை மேற்கொள்வதில் இந்தியா வேகமாக பயணிக்க வேண்டும். பன்னாட்டு முடநீக்கியல் அறுவை சிகிச்சை மற்றும் விபத்து காய சிகிச்சை சங்கம் வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளை சேர்ந்த மருத்துவர்களை இணைத்து செயல்படுவது பாராட்டுக்குரியது.

ஏழைகளுக்கு சிறந்த மருத்துவ சிகிச்சை அளிக்க தொழில்நுட்பம் பெரிதும் உதவும் என்றார் அவர்.

இந்த மாநாட்டையொட்டி சென்னை மருத்துவக் கல்லூரியில் சடலங்களில் முழு இடுப்பு மூட்டு மாற்று சிகிச்சைக்கான பயிலரங்கம் நடைபெறுகிறது என தமிழ்நாடு முடநீக்கியல் கழகத் தலைவர் ச. சிங்காரவேல் தெரிவித்தார்.

தொடர்ந்து, முதல் முறையாக நாட்டில் நடைபெறும் இந்த பன்னாட்டு மாநாடு ஸ்ரீ ராமச்சந்திரா கல்வி நிறுவனத்தில் நடத்தப்படுவது பெருமை அளிக்கிறது என பல்கலை. துணைவேந்தர் ச. உமா சேகர் தெரிவித்தார்.

மாநாட்டை முன்னிட்டு அடிப்படை விபத்துக் காய சிகிச்சை, மேம்பட்ட விபத்துக் காய சிகிச்சை, அடிப்படை முதுகு தண்டுவட, நுண்துளை முதுகு தண்டுவட, நுண்துளை முடநீக்கியல் மற்றும் குழந்தைகளுக்கான முடநீக்கியல் அறுவை சிகிச்சைகள், ரோபோ பயன்படுத்தி முழங்கால் மூட்டு மாற்று சிகிச்சை ஆகியவை சார்ந்த ஆறு பயிலரங்குகள் நடைபெறுகின்றன.

இங்கு இளம் முடநீக்கியல் அறுவை சிகிச்சை மருத்துவர்களுக்கு நிபுணர்கள் பயிற்சி அளிக்கவுள்ளனர்.

இந்த மாநாட்டில் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேஷியா, ஹாங்காங், எகிப்து உள்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 330 மருத்துவர்கள் பங்கேற்றுள்ளனர்.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# மக்களின் நம்பிக்கையை காப்பாற்றத்தான் அதிகாரம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின்

**கோவை, ஆக. 19:** 'மக்கள் நம் மீது வைத்திருக்கும் நம்பிக்கையைக் காப்பாற்றத்தான் அதிகாரம் பயன்பட வேண்டும் என்று நினைத்து செயல்பட்டு வருகிறேன்' என்றார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

கோவை கொடிசியா வளாகத்தில் தமிழ்நாடு புத்தொழில், புத்தாக்க இயக்கம் சார்பில் 2 நாள்கள் நடைபெறும் புத்தொழில் (ஸ்டார்ட்அப்) திருவிழா சனிக்கிழமை தொடங்கியது.

இந்த விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி மூலம் பங்கேற்றுப் பேசியதாவது: கல்வி சிறந்த தமிழ்நாடு, கலைகள் சிறந்த தமிழ்நாடு என்பதுபோல தற்போது தொழில்கள் சிறந்த தமிழ்நாடு என்ற நிலையை நோக்கி நாம் முன்னேறி வருகிறோம்.

பன்னாட்டு நிறுவனங்களின் முதலீடுகளுடனான தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டுக்கு முக்கியம்தான். ஆனால் குறு, சிறு தொழில்களின் வளர்ச்சி அதைவிட முக்கியமானது. அந்த வகையில் தொழில் வளர்ச்சியில் தமிழக அரசு அக்கறை செலுத்துகிறது. இந்த ஒருங்கிணைந்த வளர்ச்சியில் தமிழ்நாடு புத்தொழில், புத்தாக்க இயக்கத்தின் பங்கு முக்கியமானது.



கோவையில் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில், புத்தொழில்முனைவோருக்கான நிதி பங்களிப்பு ஆணையை வழங்கிய அமைச்சர் தா.மோ.அன்பரசன். உடன், அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, ஆட்சியர் கிராந்திகுமார் பாடி, எம்எல்ஏ வானதி சீனிவாசன், மாநகராட்சி ஆணையர் மு.பிரதாப் உள்ளிட்டோர்.



தமிழ்நாட்டில் 2021, மார்ச் நிலவரப்படி சுமார் 2,300 ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டிருந்தன. ஆனால், திமுக ஆட்சிக்கு வந்த பிறகு எடுத்த முயற்சிகளின் பலனாக, 2 ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை கிட்டத்தட்ட 3 மடங்காகி, இப்போது 6,800–க்கும் மேல் உயர்ந்துள்ளது.

—முதல்வர் மு.க.ஸ்டாலின்

தமிழ்நாட்டில் 2021 மார்ச் நிலவரப்படி சுமார் 2,300 ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டிருந்தன. ஆனால், திமுக ஆட்சிக்கு வந்த பிறகு எடுத்த முயற்சிகளின் பலனாக, 2 ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை கிட்டத்தட்ட 3 மடங்காகி, இப்போது 6,800-க்கும் மேல் உயர்ந்துள்ளது.

**வட்டாரப் புத்தொழில் மையங்கள்:** புத்தொழில் நிறுவனங்களின் வளர்ச்சி பெருநிறுவனங்களைத் தாண்டி மாநிலத்தின் எல்லா பகுதிகளையும் சென்றடைய வேண்டும். இதற்காக கடந்த நிதியாண்டில் மதுரை, ஈரோடு, நெல்லை ஆகிய நகரங்களில் வட்டாரப் புத்தொழில் மையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

நடப்பு நிதியாண்டில் சேலம், ஒசூர், கடலூர், தஞ்சாவூர் ஆகிய இரண்டு, மூன்றாம் நிலை நகரங்களில் வட்டாரப் புத்தொழில் மையங்களை நிறுவும் பணி நடைபெறுகிறது.

இதில், சமூக நீதியை நிறைவேற்றும் வகையில், ஆதிதிராவிடர்களால் நிறுவப்படும் புத்தொழில் நிறுவனங்களுக்கு பங்கு முதலீடாக கடந்த நிதியாண்டில் ரூ.30 கோடி சிறப்பு நிதி ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டு அது ரூ.50 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

புத்தொழில்முனைவோருக்கு வழிகாட்டுதல் வழங்குவதற்காக 'மென்டார் டி.என்.' என்ற வழிகாட்டி மென்பொருள் தளத்தையும் தொடங்கியுள்ளோம். அதேபோல, முதலீட்டாளர்களையும் புத்தொழில்முனைவோரையும் இணைக்க முதலீட்டாளர் இணைப்புத் தளம் தொடங்கப்பட்டுள்ளது.

**முதலிடத்தில் சென்னை:** துணிகர முதலீடுகளை ஈர்ப்பதில் கடந்த ஜூலை மாதத் தரவுகளின் அடிப்படையில் இந்திய நகரங்களிலேயே சென்னை முதலிடத்தில் உள்ளது. மந்தமான முதலீட்டுச் சூழலிலும் சென்னை சார்ந்த நிறுவனங்கள் மீது முதலீட்டாளர்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை இது காட்டுகிறது.

புத்தொழில்முனைவோருக்கு உலகளாவிய முதலீடு, சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரும் நோக்கில், உலக வர்த்தக மையமாக மாறி வரும் துபையில் ஒருங்கிணைப்பு மையம் ஒன்று அமைக்கப்பட உள்ளது.

திமுக அரசு பொறுப்பேற்ற பிறகுதான், மத்திய அரசின் ஸ்டார்ட் அப் இந்தியா அமைப்பு வழங்கும் 'லீடர்' அங்கீகாரம் தமிழ்நாட்டுக்குக் கிடைத்திருக்கிறது.

அதிகாரத்தை வானளாவியதாக நான் எப்போதும் கருதுவதில்லை. திருக்குறளில் இருக்கும் அதிகாரங்கள்போல நெறிப்படுத்தி வழிகாட்டுவதற்காகத்தான் என்று கருதுகிறேன். மக்கள் நம் மீது வைத்திருக்கும் நம்பிக்கையைக் காப்பாற்றத்தான் அதிகாரம் பயன்பட வேண்டும் என்று நினைத்து செயல்பட்டு வருகிறேன்.

தமிழ்நாட்டை புத்தொழில் நிறுவனங்களுக்கு ஏற்ற மாநிலமாக மாற்றி, உலகின் முதன்மை மாநிலமாக மாற்றுவோம் என்றார்.

**முக்கிய நகரங்களில் கண்காட்சிகள்:** முன்னதாக, ஸ்டார்ட் அப் திருவிழா கண்காட்சியை குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா ஆகியோர் திறந்துவைத்தனர்.

இதையடுத்து, அமைச்சர்கள் இருவரும் செய்தியாளர்களிடம் கூறியது: தமிழகத்தில் முதல்முறையாக நடைபெறும் இந்த ஸ்டார்ட் அப் திருவிழாவில் 450–க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பங்கேற்று தங்களின் கண்டுபிடிப்புகளைக் காட்சிப்படுத்தியுள்ளன. மாநிலத்தின் முக்கிய நகரங்களில் இது போன்ற கண்காட்சிகள் ஆண்டுதோறும் நடத்தப்படும் என்றனர்.

# சந்திரயான்– 3 விண்கலம் சாதிக்கும்

**திருச்சி, ஆக.19:** திட்டமிட்டபடி நிலவின் தென் துருவத்தில் சந்திரயான்-3 இறங்கி சாதனை புரியும் என இஸ்ரோ முன்னாள் விஞ்ஞானியும், தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மன்ற துணைத் தலைவருமான மயில்சாமி அண்ணாதுரை தெரிவித்தார்.

திருச்சி ஸ்ரீமதி இந்திராகாந்தி கல்லூரியில் சனிக்கிழமை நடைபெற்ற விழாவில் பங்கேற்ற அவர், செய்தியாளர்களிடம் மேலும் கூறியது:



சந்திரயான்-3 நிலவின் தென்துருவத்தில் வரும் 23-ஆம் தேதி வெற்றிகரமாக இறங்கவுள்ளது. அப்போது அங்கு பகல் பொழுதாக இருக்கும்.

எந்த நிலையில், எத்தகைய பழுதோ, சிக்கல்களோ ஏற்பட்டாலும் அதனை நிவர்த்தி செய்ய மாற்று வசதியும் தன்னகத்தே கொண்டுள்ளது.

எனவே, சந்திரயான்-3 திட்டமிட்டபடி சாதிக்கும். நிலவில் நீர் உள்ளதைக் கண்டறிந்துள்ளதைத் தொடர்ந்து வேறு மூலப்பொருள்கள் இருக்கிறதா என்பதை ஆய்வு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள இந்தப் பயணம் வெற்றிகரமாக நடைபெறும் என்ற நம்பிக்கை உள்ளது என்றார் மயில்சாமி அண்ணாதுரை.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# நாகையிலிருந்து இலங்கைக்கு விரைவில் பயணிகள் படகு சேவை

**சென்னை, ஆக. 19:** இலங்கைக்கு பயணிகள் படகு சேவையை விரைவில் தொடங்கும் வகையில், நாகை துறைமுகம் தயாராகி வருவதாக நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

குஜராத் மாநிலம் கெவாடியாவில், கடலோர மாநிலங்கள் மேம்பாட்டுக் குழுமக் கூட்டம் சனிக்கிழமை நடைபெற்றது. மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறை அமைச்சர் சர்வானந்த சோனோவால் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது:

கிழக்கு மற்றும் மேற்குப் பகுதியில் நுழைவாயிலுடன் கூடிய தனித்துவமான கடற்கரைப் பகுதியை தமிழ்நாடு கொண்டுள்ளது. அதன் கடல்சார் மற்றும் துறைமுகத் துறையை வலுப்படுத்த தமிழ்நாடு அரசு உறுதியுடன் உள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள துறைமுகங்களை மேம்படுத்துவதில் மாநில அரசு தீவிரம் காட்டி வருகிறது. கடந்த 5 ஆண்டுகளில் சாகர் மாலா திட்டத்தின் கீழ், மாநில கடல்சார் வாரியத்துக்கு

## சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு



குஜராத் மாநிலம் கெவாடியாவில் மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் சர்வானந்த சோனோவால் தலைமையில் சனிக்கிழமை நடைபெற்ற 19–ஆவது கடலோர மாநிலங்கள் மேம்பாட்டுக் குழுமக் கூட்டத்தில் தமிழக துறைமுகங்களின் சிறப்புகள் குறித்து பேசிய தமிழக பொதுப்பணி, சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு. உடன் தமிழக நெடுஞ்சாலைத் துறைச் செயலர் பிரதீப் யாதவ், கடல்சார் வாரிய தலைமை நிர்வாக அலுவலர் சி.நடராஜன், மாநில துறைமுக அலுவலர் எம்.அன்பரசன்.

ரூ.120 கோடி நிதியை மத்திய அரசு வழங்கியுள்ளது.

**பயணிகள் படகு சேவை:** இந்தியாவை சர்வதேச அளவில் இணைக்கும் வகையில், இலங்கைக்கு பயணிகள் படகு சேவையைத் தொடங்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்தியா மற்றும் இலங்கை இடையேயுள்ள நீண்டகால வரலாறு மற்றும் கலாசார உறவுகளை மேலும் வலுப்படுத்த சர்வதேச பயணிகள் படகு சேவை துணைபுரியும்.

இந்தப் பயணிகள் படகு சேவையால், இரு நாடுகளுக்கு இடையே சுற்றுலாப் பயணிகளின் போக்குவரத்து அதிகரிப்பதுடன், வர்த்தகமும் மேம்படும். படகு சேவையை விரைவில் தொடங்குவதற்கு நாகை துறைமுகம் தயாராகி வருகிறது.

இத்துடன் ராமேசுவரம் மற்றும் தலைமன்னார் இடையே படகு சேவையை புதுப்பிப்பதற்கான ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டு வருகின்றன. அதற்கான விரிவான ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. 1980-ஆம் ஆண்டு வரையிலும் இந்தியா மற்றும் இலங்கை இடையே கடல் வழிப் போக்குவரத்து சேவை செயல்பாட்டில் இருந்தது. மத்திய அரசு மற்றும் தமிழக அரசின் நடவடிக்கைகளால், இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையே பாரம்பரிய கடல்வழிகள் புதுப்பிக்க வழி ஏற்பட்டுள்ளது.

**கடலூரில் துறைமுகம்:** தமிழகத்தின் மத்திய மாவட்டங்களில் உள்ள தொழிற்சாலைப் பகுதிகளுக்குத் தேவையான சரக்குகளை கையாள தனி துறைமுகம் தேவையாக உள்ளது. இதைக் கருத்தில் கொண்டு, கடலூர் பகுதியில் பெரும்திறன் கொண்ட பசுமை வளத்துறைமுகத்தை உருவாக்க தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது. ஆண்டுக்கு 10 மில்லியன் மெட்ரிக் டன் அளவு சரக்குகளை கையாளும் திறனை இந்தத் துறைமுகம் பெற்றிருக்கும் என்றார் அவர்.

இந்தக் கூட்டத்தில், தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறை கூடுதல் தலைமைச் செயலர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு கடல்சார் வாரிய தலைமை நிர்வாக அலுவலர் சி.நடராஜன், மாநில துறைமுக அலுவலர் எம்.அன்பரசன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

EVA STALIN IAS

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**